ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2084/18 - 2018 අගෝස්තු මස 14 වැනි අඟහරුවාදා - 2018.08.14

*2084/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராகவிருப்பதனால் 2014, சனவரி மாதம் 30 ஆந் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.*

*2014, சனவரி மாதம் 30 ஆந் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையின் வாசகம் (4), கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கெனப் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

*"(4) மேற்கூறப்பட்ட கருத்திட்டமானது, இலங்கை முதலீட்டுச் சபையுடனான கருத்திட்ட உடன்படிக்கையிற் கூறப்பட்ட திகதியிலிருந்து தொண்ணூற்றி இரண்டு (92) மாதங்களினுள் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்."*

*மலிக் சமரவிக்ரம (பா. உ.),*
*அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும்*
*சர்வதேச வியாபார அமைச்சர்.*

*கொழும்பு,*
*2018, ஓகத்து 14.*

*08-1029*

1A - PG 4172 — 382 (2018/08) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*